இலங்கையின் முதலாவது

# வேலைநிறுத்தம்:

## அச்சுத்தொழிலாளர் போராட்டம் - 1893

MR. SIVA. JOTHILINGAM
B.A. (Hons) Po-Sc., Dip-IN-IA (SCIS),
Teacher,
Goodshepherd Convent,
COLOMBO-13.

குமாரி ஜயவர்த்தன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் முதலாவது வேலைநிறுத்தம் :

## அச்சுத் தொழிலாளர் போராட்டம் - 1893

MR. SIVA. JOTHILINGAM
B A (Hons) Po-Sc., Dip-IN-IA (BCIS),
Teacher,
Goodshepherd Convent,
COLOMBO-13.

குமாரி ஜயவர்த்தன

சஞ்சீவ வெளியீடு,
69, கிறெகறீஸ் வீதி,
கொழும்பு – 7, இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் முதலாவது வேலைநிறுத்தம்:
அச்சுத் தொழிலாளர் போராட்டம் - 1893

குமாரி ஜயவர்த்தன

விலை ரூபா : 7/50

The Printers Strike Of 1893
by
Dr. Kumari Jayewardene

Second Edition : August 1989 (Tamil)

Price : Rs. 7/50

Printed at : New Era Publications Ltd , Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1973 ஆம் ஆண்டுடன் அச்சுத் தொழிலாளர்களின் முதல் வேலை நிறுத்தம் நடந்து முடிந்து 80 ஆண்டுகள் நிறைவுறுகின்றன. இலங்கையில் முதன்முதலாக நடைபெற்ற இந்த முக்கிய வேலைநிறுத்தமே 1893 இல் இலங்கையில் முதல் தொழிற்சங்கம் உருவாக வழிவகுத்தது.

1893 செப்டம்பர் 12ம் திகதி எச். டபிள்யு. கேவ் அன் கொம்பனியைச் சேர்ந்த 60 அச்சுத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தமை நாட்டில் ஒரு பரபரப்பை ஏற்படுத்தியது. மறுநாள் அவர்கள் வேறு ஸ்தாபனங்களிலும் இருந்த அச்சுத் தொழிலாளர்களுடன் சேர்ந்து இலங்கை அச்சுத் தொழிலாளர் சங்கத்தை உருவாக்கினர். இந்த நிகழ்ச்சிகள் ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் அளித்தன.

சுதேசத் தொழிலாளர்கள் பணிவுள்ளவர்கள் என்றும் வேலை நிறுத்தம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட மாட்டார்கள் என்றும் இலங்கையில் இருந்த பிரிட்டிஷ் முதலாளிகள் கருதி வந்தனர்.

சமூக அமைப்பைக் குலைக்கும் சக்திகளையும் மூலதனத்திற்கும் தொழிலாளர்களுக்கும் இடையிலான மோதலையும் மக்கள் கர்மத்தின் மீது கொண்டிருந்த நம்பிக்கையே தடுத்து வைத்தது என்று இலங்கை முதலாளிகள் கூறிவந்தனர். 1902ல் டி. பி, ஜயதிலக்காவும் இதனையே கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந்தோட்ட முதலாளித்துவத்தின் ஓர் உப விளை வாகக் கொழும்பில் "சுயேச்சையான" கூலித்தொழிலாளர் கூட்டம் ஒன்று உருவாகியிருந்தமையால் நகர்த் தொழிலா ளர்கள் மத்தியில் இத்தகைய ஒரு கிளர்ச்சியை எதிர் நோக்க வேண்டியிருந்தது.

அச்சுத் தொழிலாளர்களின் சரித்திர முக்கியத்துவம் மிக்க நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுமுன் தொழிலாளர் இயக் கங்களின் எழுச்சி பற்றியும் நாம் ஆராய வேண்டும். எனவே முதலாளித்துவத்தின் வளர்ச்சி பற்றியும் சுருக்க மாக ஆராய்வோம்,

தொழிலாளர் வர்க்கம் ஒழுங்கு முறையான நடவடிக் கைகளை மேற்கொள்ளுகிறது. முதலாளித்துவத்திற்கு முற் பட்ட காலப்பகுதியில் நடைபெறும் அடிமைகளின் கிளர்ச்சி, விவசாயிகள் கலகம் போன்ற அடக்கு முறைக்கான எதிர்ப் புகளில் இருந்து இந்த ஒழுங்கு முறையில் அமைந்த தொழிலாளர் நடவடிக்கைகள் வேறுபடுகின்றன,

வேலை செய்யும் எல்லாருமே தொழிலாளர் வர்க்கத் தைச் சேரமாட்டார்கள். தொழிலாளர் வர்க்கம் என்னும் போது, தங்களின் உழைப்புச் சக்தியைக் கூலிக்கு விற்று, தொழிற்சாலைகளில் வேலை செய்வோரையோ அல்லது ஒழுங்குபடுத்தப்பட்ட குழுவினரையோதான் கருதுகிறோம்.

இவர்கள் அடிமைகளிலிருந்து வேறுபட்டவர்கள். அடி மைகள் எஜமானனின் கீழ் சம்பளம் இல்லாமல் வேலை வாங்கப்படுபவர்களாவர். நிலச் சுவாந்தார்களின் நிலத் தோடு பிணைக்கப்பட்டு, கூலியாக அல்லாமல், உற்பத்தி யின் ஒரு பங்கினையே பெற்றுக்கொள்ளும் குடிமைகளில் இருந்தும் இவர்கள் வேறுபட்டவர்கள். விவசாயிகள், கைவினைஞர்கள் போன்று தனிப்பட்ட முறையில் வேலை செய்யும் சிறு பண்ட உற்பத்தியாளர்களில் இருந்தும் இவர்கள் வேறுபட்டவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழிலாளர் வர்க்கத்தின் குணும்சங்கள் எவை?

தொழிலாளர் வர்க்கம் முதலாளித்துவத்தின் தோற்றத்துடன் உதயமாகிறது. தொழிற்சாலைகள், இயந்திரங்கள் போன்ற உற்பத்திச் சாதனங்கள் முதலாளித்துவத்தின் உடைமையாகின்றன. பண்ணை அடிமைகள் அல்லது குடிமைகள் உற்பத்திச் சாதனங்களின் ஒரு பகுதிக்கு அதாவது நிலத்திற்கு உரித்துக் கோரக் கூடியதாக இருந்தது. ஆனல் தொழிலாளர்களுக்கு எதுவுமில்லை. ஒரு தினத்திற்கு 8 மணித்தியாலங்களில் இருந்து 10 மணித்தியாலங்கள் வரை அல்லது அதற்கு மேலாக வேலைசெய்யும் சக்தியே அவனுக்கிருந்தது. இதுவே அவனது உழைப்புச் சக்தியாகும். ஒருவன் பொருட்களை விற்பது போல் அவன் முதலாளிக்கு உழைப்புச் சக்தியை விற்கிருன்.

முதலாளிகளுக்குத் தன் உழைப்புச் சக்தியை விற்று அவன் பெற்றுக்கொள்வது கூலியாகும். ஆகவே அவன் கூலித் தொழிலாளி ஆகிருன்.

ஓர் எஜமானுக்குச் சொந்தமான அடிமையில் இருந்து கூலித் தொழிலாளி வித்தியாசமானவன்.

ஒரு பண்ணைக் குடிமையிலிருந்தும் இவன் வேறுபட்டவன். ஏனெனில் கூலித்தொழிலாளி நிலத்தோடு பிணைக்கப்படவில்லை.

வேலை நேரத்திற்குப் பிறகு முதலாளிகளுக்கு தொழிலாளர்கள் மீது எந்த உரித்தும் இல்லை. அவன் 'சுதந்திரமான' தொழிலாளி ஆவான்.

இந்நிலை அவசியமானதாகும். இதன் மூலமாகவே கூடிய சம்பளத்தையும் சிறந்த வாழ்க்கை வசதிகளையும் பெற்றுக்கொள்ள அவன் ஓரணியில் திரள முடிகிறது.

எனவேதான் தங்களின் கஷ்டநஷ்டங்களை பிரக்ஞைபூர்வமாக உணர்ந்து தங்களின் நிலையை உயர்த்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராடுவதில் அக்கறை கொண்ட சுதந்திரமான கூலித் தொழிலாளர்கள் தொழிலாளர் வர்க்கத்தின் எழுச்சிக்கு ஆதாரமாவர்.

19ஆம் நூற்றுண்டில் இலங்கையில் ஏற்பட்ட முதலாளித்துவத்தின் வளர்ச்சி கைத்தொழில் சார்ந்ததாக அமையவில்லை. அதாவது, பண்டங்களை உற்பத்தி செய்து, தயாரித்து வழங்கும் கைத்தொழில்களைச் சார்ந்து முதலாளித்துவம் வளர்ச்சியுறவில்லை.

மாருக, ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்யப்படும் விவசாயப் பெருந்தோட்டங்களை அடிப்படையாகக் கொண்டே முதலாளித்துவம் வளர்ச்சியுற்றிருந்தது. லாபநோக்கம் கருதியே ஏகாதிபத்தியவாதிகள் பெருந்தோட்டங்களை உருவாக்கினர்.

18ஆம் நூற்றுண்டில் டச்சுக்காரரர்கள் கறுவாத்தோட்டங்களை ஆரம்பித்தனர். 1830 அளவில் ஆங்கிலேயர் கோப்பித் தோட்டங்களைத் திறந்தனர், கோப்பிப் பயிரில் ஏற்பட்ட ஒருவித நோய்காரணமாக 1880இல் கோப்பித் தோட்டங்கள் வீழ்ச்சி அடைந்தன. 18௦0இலிருந்து ஆங்கிலேயரால் தேயிலைத்தோட்டங்களே ஆரம்பிக்கப்பட்டதுடன், அந்நூற்றுண்டின் இறுதியில் தென்னை, றப்பர் என்பனவும் விருத்தியாக்கப்பட்டன.

பெருந்தோட்டத்துறையின் அபிவிருத்தியால் வேறுபல அபிவிருத்திகளும் ஏற்பட்டன.

- ஒரு வர்த்தக மையமாகக் கொழும்பு நகர் வளர்ச்சி அடைந்தது.

- வங்கிகள், ஏஜென்ஸி இல்லங்கள், மற்றும் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்குத் தேவையான பக்கிங் செய்யும் தொழிற்சாலைகள், எஞ்சினியரிங் வேர்க்ஷொப்புகள் என்பனவும் வளர்ச்சியுற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● சில்லறை வியாபாரமும் மொத்த வியாபாரமும் அபிவிருத்தி அடைந்தன.

பெருந்தோட்டப் பொருளாதாரத்துடன் இணைந்து, போக்குவரத்து வசதிகளும் வளர்ச்சியுற்றன. துறைமுகம் விஸ்தரிக்கப்பட்டதுடன், ரயில் பாதை போக்குவரத்துகளும் அபிவிருத்தி செய்யப்பட்டன.

● கொழும்புத்துறைமுகம் விஸ்தரிக்கப்பட்டது.

● கொழும்புக்கும் கண்டிக்கும் இடையே முதல் ரயில்வே பாதை 1864இல் போடப்பட்டது. பெருந்தோட்ட மாகாணங்கள் ரயில்வே பாதைகளால் கொழும்புடன் இணைக்கப்பட்டன. 1911இல் 700 மைல் நீளமான ரயில்வே பாதை அமைக்கப்பட்டிருந்தது.

● பொது வேலைத் திணைக்களம் பாதைகள் அமைத்தது. 1912ஆம் ஆண்டில் 400 மைல் நீளமான பாதைகள் அமைக்கப்பட்டிருந்தன.

பெருந்தோட்ட முதலாளித்துவத்தின் வளர்ச்சியின் விளைவாகப் புதிய தொழிலாளர் வகுப்பினர் உருவாகினர்.

● **தோட்டத் தொழிலாளர்கள்:** உள்நாட்டில் போதுமான தொழிலாளர்கள் கிடைக்காமையால் தென்னிந்தியாவிலிருந்து தோட்டங்களுக்குத் தொழிலாளர் திரட்டப்பட்டனர். சிங்கள விவசாயிகள் ஓரளவாயினும் தமக்கென நிலம் வைத்திருந்ததாலும், பூரணமாக நிலமே இல்லாத நிலை காணப்படாமையாலும் தான் தோட்டங்களில் வேலைசெய்ய விரும்பவில்லை. 1900ஆம் ஆண்டளவில் மூன்று லட்சம் தோட்டத் தொழிலாளர்களும் அவர்களில் தங்கியிருப்போரும் இலங்கையில காணப்பட்டனர்.

● **எழுதுவினைஞர்கள் :** நிருவாகத்தைக் கொண்டு நடாத்தவும் ஏற்றுமதிப் பொருளாதாரத்திற்கும் அரசாங்கத் துறையிலும் தனியார் துறையிலும் பெருமளவு எழுதுவினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞர்கள் தேவைப்பட்டனர். 1911ஆம் ஆண்டில் அரசாங்கத் துறையில் 5400 எழுதுவினைஞர்கள் வேலை பார்த்தனர்.

● **நகர்ப்புறத் தொழிலாளர்கள் :** துறைமுகம், ரயில்வே பாதைகள், அச்சியந்திரசாலைகள், ட்ராம் வேக்கள், கடைகள் ஆகியவற்றில் கூலி உழைப்பு மேற்கொண்ட நகர்ப்புறத் தொழிலாளர்களும் கணிசமான அளவில் காணப்பட்டனர். 1911இல் சிங்களவரும் தமிழரும் மலையாளிகளுமாக 75,000 நகர்ப்புறத் தொழிலாளர்கள் காணப்பட்டனர். இவர்களில் பயிற்சி எதுவுமே இல்லாத தொழிலாளர்களும், வீட்டு வேலைக்காரர்களும் அடங்குவர். இவர்களோடு பின்வரும் பிரிவினரும் அடங்குவர்.

21000 பாதைத் தொழிலாளர்கள்.

9500 ரயில்வேத் தொழிலாளர்கள்.

2800 தச்சர்கள்

2300 கொல்லர்கள்.

1800 மேசன்மார்

950 அச்சுக்கோப்பவர்கள்.

648 பொற்கொல்லர்கள்.

180 ட்ராம்வேத் தொழிலாளர்கள்

பெருந்தோட்டங்களில் ஏன் முதன்முதலாகத் தொழிலாளர் இயக்கம் உருவாகவில்லை என்பதை இங்கு ஆராய்வோம்.

19ஆம் நூற்றுண்டில் இலங்கைத் தொழிலாளர்களில் தோட்டத்தொழிலாளர்களே பெரும்பங்கு வகித்ததுடன் பெரும் இன்னல்களையும் அனுபவித்து வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● இலங்கையில் ஆகக் குறைவான சம்பளம் இவர்களுக்கே வழங்கப்பட்டது, ஆண்களுக்கு ஒரு நாளைக்கு 33 சதமும் பெண்களுக்கு 25 சதமும் வழங்கப்பட்டது.

● சம்பளம் ஒழுங்கு முறையாக வழங்கப்படவில்லை. சில சமயங்களில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறையும் வழங்கப்பட்டது.

● அவர்கள் என்றும் நிரந்தரமாகக் கடனில் மூழ்கி இருந்தனர்.

● கங்காணிமார்கள் தொழிலாளர்களின் சம்பளத்தில் மோசடிகள் செய்தனர்.

● சாப்பாடும் இல்லாமல் அவர்கள் காலை 6 மணியில் இருந்து 4 மணிவரையும் வேலைசெய்தனர்,

● அவர்களின் மரண விகிதமும், சிசு மரண விகிதமும் பிரசவ மரண விகிதமும் இலங்கையின் தேசிய விகிதாசாரத்திலும் இரண்டு மடங்காக அல்லது அதற்குக் கூடவாக இருந்தது.

● தோட்டங்களில் பாடசாலைகள் எதுவுமில்லை. தொழிலாளர்களில் அநேகமாக நூற்றுக்கு நூறு வீதத்தினர் கல்வி அறிவற்றவர்களாவர்.

● 1865ஆம் ஆண்டுத் தொழில்சட்டத்தின்படி வேலையிலிருந்து விலகிச் செல்லும் ஒரு தொழிலாளியைக் கைதுசெய்யவோ, காவலில் வைக்கவோ முடியும்.

தோட்டத் தொழிலாளர்களே மிகவும் மோசமாகச் சுரண்டப்பட்ட தொழிலாளர் வர்க்கத்தினராவர். ஆனால் இவர்கள் இலங்கைக்கு வந்து நூற்றாண்டுகள் சென்ற பின்னரே, அதாவது 1932ஆம் ஆண்டில்தான் தோட்டங்களில் முதல் தொழிற் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரமான கூலித் தொழிலாளர்களாகத் தோட்டத் தொழிலாளர்கள் விளங்காமையால்தான் தோட்டங்களில் தொழிலாளர் அமைப்புகள் உருவாகவில்லை. அவர்கள் அரைக் குடிமைகளாகவே வாழ்ந்தனர். தோட்ட முதலாளி களுடன் அவர்கள் நிலபிரபுத்துவத்தளைகளால் பிணிக்கப் பட்டிருந்தனர்,

● சம்பளத்தின் ஒரு பகுதி மாத்திரமே பணமாக வழங் கப்பட்டது. எஞ்சிய பகுதி அரிசி போன்ற பொருளாக வழங்கப்பட்டது.

● வீட்டு வசதியும் வேலையுடன் சேர்த்தே வழங்கப்பட் டது.

● கடன் மூலமாகத் தொழிலாளர்கள் கங்காணியுடன் பிணைக்கப்பட்டிருந்தனர்.

● தோட்டத் தொழிலாளி தான் நினைத்தது போலத் தோட் டத்தை விட்டு விலக முடியாது. அவ்வாறு விலக நினைத் தால் அவரைச் சிறையில் அடைக்கவும் சட்டம் இடம் அளித்தது.

● தொழிலாளர்கள் தங்களுக்குத் தேவையான பொருட் களை கங்காணியோ, தோட்ட நிர்வாகமோ வைத்து நடத் தும் கடைகளில் இருந்தே பெற்றுக்கொள்ள வேண்டும்.

● அடித்தல், கடுமையான தண்டனை வழங்குதல் என்பன வற்றின் மூலம் இராணுவ ரீதியிலான கட்டுப்பாடே தோட் டங்களில் அமுலில் இருந்தது. காவல் நாய்களோடு, காவல் காரர்களும் தொழிலாளர்கள் தோட்டங்களை விட்டு வெளியேற முடியாதவாறு காவலுக்குப் போடப்பட்டிருந் தனர்.

இத்தகைய அரை நிலபிரபுத்துவ அமைப்பில், தொழி லாளர்கள் சுயேச்சையான நடவடிக்கை எதனையும் மேற் கொள்வது சாத்தியமில்லாது போயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நகர்ப்புறத் தொழிலாளர்களின் நிலை என்னவாக இருந்தது என்று பார்ப்போம்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு மாறாக நகர்ப்புறத் தொழிலாளர்கள் சுயேச்சையான தொழிலாளர்களாக விளங்கினர்.

- இவர்கள் தம் உழைப்புச் சக்தியைக் கூலிக்கு விற்றனர். இதனைவிட இவர்களுக்கும் முதலாளிக்கும் வேறு எந்தத்தளையும் பிணைப்பும் இருக்கவில்லை.

- இத்தொழிலாளர்களில் பலருக்கு நிலம் இருந்தபோதும் இவர்கள் கூலிக்காகவே வேலை செய்தனர். எனவே தொழில்களை விருப்பத்திற்கேற்ப மாற்றிக் கொள்ளும் சுதந்திரம் இருந்தது.

- வீட்டு வசதிகளுக்கும் வேலைக்கும் எவ்விதச் சம்பந்தமும் இருக்கவில்லை. வேலை முடிந்ததும் அவர்கள் முதலாளியிடமிருந்து விடுபட்டே காணப்பட்டனர். அதனுல் முதலாளிகளுக்கு எதிரான கிளர்ச்சிகளில் அவர்கள் ஈடுபட முடிந்தது.

நகர்ப்புறத் தொழிலாளர்களில் கணிசமான பகுதியினர் முழுமையாகவோ, அரை குறையாகவே பயிற்றப்பட்டவர்களாகவும், கல்வியறிவுடையவர்களாகவும் தம் கஷ்டங்களைப் பற்றிய உணர்வு படைத்தவர்களாகவும், அவற்றைக் குறித்து கேள்வி எழுப்பக் கூடியவர்களாகவும் இருந்தனர்.

நகர்ப்புறத் தொழிலாளர்களுக்கும் பல கஷ்டங்கள் இருந்தன.

- முழுமையாகப் பயிற்சி பெற்றவர்களுக்கு ஒரு ரூபாயும் பயிற்றப்படாதவர்களுக்கு 60 சதமுமே கூலியாக வழங்கப்பட்டது.

- வேலை செய்யும் நேரம் ஒரு நாளில் 9 மணித்தியாலங்களுக்கும் 13 மணித்தியாலங்களுக்கும் இடையில் வேறுபட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● வேலைக்கு வராது போனால். அல்லது வேலையில் ஏதும் தவறுகள் ஏற்பட்டால் எதேச்சாதிகாரமாக அபராதம் விதிக்கப்பட்டது. அல்லது சம்பளத்திலிருந்து அபராதம் கழிக்கப்பட்டது.

● வேலை நிறுத்தம் செய்யும் உரிமை அவர்களுக்கு இருக்க வில்லை. வேலை ஒப்பந்தங்களை மீறுபவர்களைச் சிறையில் போட வும் உரிமை இருந்தது.

உலகின் பல நாடுகளில் அச்சுத் தொழிலாளர்கள் தான் முதன் முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின் றூர்கள். அவர்கள் தொழில்நுட்பப் பயிற்சி பெற்றவர்களாக வும், கல்வியறிவு படைத்தவர்களாகவும் தங்களின் கஷ்டங்க ளைப் பற்றிய பிரக்ஞை கொண்டவர்களாகவும், தெளிவு படைத்தவர்களாகவும், தீவிரமானவர்களாகவும் இருப்பதே இதற்கு காரணம் எனலாம்.

இலங்கையில் முதலாளிகளுக்கு எதிரான முதல் சவால் அச்சுத் தொழிலாளர்கள் மத்தியில் இருந்தே எழுந்தது என்பதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை, மிகச் சீர்குலைந்த, சுரண்டப்பட்ட தொழிலாளர்களே அநாதரவான நிலையில் அடிக்கடி கலகங்களில் ஈடுபடுகிறவர்களாவர். ஆனால் தொழில் நுட்பப் பயிற்சி கொண்ட, கல்வியறிவு படைத்த தொழிலாளர்களே அமைப்பாகத் திரண்டு, யுக்திகளைத் திட்ட மிட்டு, தொழிற் சங்கப் போராட்டங்களை நடத்துபவர்க ளாக விளங்குகிறூர்கள். இந்த அர்த்தத்தில், இலங்கையில் 19 ம் நூற்றூண்டில் நகர்த் தொழிலாளர் அணியின் முன்ன ணியில் அச்சுத் தொழிலாளர்களே நின்றனர் என்பது பொருந்தும்.

1890 ஆம் ஆண்டில் இலங்கையில் ஏறக்குறைய ஆயிரம் அச்சுத் தொழிலாளர்கள் இருந்தனர். அரசாங்க அச்சியந் திரங்களில் பணியாற்றி மாதம் 30 ரூபாய் சம்பளம் பெறு வோரிலிருந்து சிறு சிறு ஸ்தாபனங்களில் மாதாந்தம் 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூபாய் சம்பளம் பெறுவோர்வரை இவர்கள் பல ரகங்களில் காணப்பட்டனர். இவர்கள் அதிருப்தியுற்றும் எழுச்சியுற்றும் திகழ்ந்தனர். 1849ஆம் ஆண்டளவிலேயே தங்கள் மீது விதிக்கப்பட்ட புதிய சட்ட விதிகளுக்கு எதிராக அரசாங்க அச்சகத்தைச் சார்ந்த தொழிலாளர்கள் ஒரு அமைப்பிலிருந்து இராஜினமாச் செய்திருக்கிறுர்கள். நல்ல பிரசைகளுக்கு ஒவ்வாத முறையில் சாதாரண கூலிகளும் அடிமைகளும் நடத்தப்படக்கூடிய முறையில் எதேச்சதிகாரமாகவும் மரியாதையீனமாகவும் தாங்கள் நடத்தப்படுவதாக அவர்கள் முறையிட்டுக் குற்றம் சாட்டினுர்கள். அர்த்தம் இல்லாத குற்றச்சாட்டுகளைக் கூறினுர்கள் என்று இவர்கள் வேலையிலிருந்து விலக்கப்பட்டார்கள்.

இந்நிகழ்ச்சி நடைபெற்று 45 ஆண்டுகளுக்குப் பின்னர் கொழும்பில் உள்ள அச்சுத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் அளவுக்கு வளர்ச்சியுற்றிருந்தனர்.

இந்த முதல் முக்கிய அச்சுத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் பிரிட்டிஷாருக்குச் சொந்தமாயிருந்த எச், டபிள்யூ கேவ்அன் கொம்பனியிலேயே நடைபெற்றது. இந்த நிறுவனமே அப்போது கொழும்பில் இருந்த மிகமுக்கிய அச்சியந்திரசாலையாகவும் வெளியீட்டு நிறுவனமாகவும் விளங்கியது. கேவ்வில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குரிய சம்பளம் ஒவ்வொரு மாதமும் 10ஆம் திகதிதான் வழங்கப்பட்டது. 1893ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் தொழிலாளர்களுக்குச் சம்பளம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது. இனிமேல் தங்களின் மாதச் சம்பளம் ஒவ்வொரு மாதமும் 6ஆம் திகதியே வழங்கப்படவேண்டும் என்று அத்தொழிலாளர்கள் அம்மாதம் 12 ஆம் திகதி கூட்டாக வேண்டுகோள் விடுத்தனர். இந்த வேண்டுகோளை கொம்பனி மனேஜரான பார்லோ மூர் நிராகரித்தார். அவர் கலைஞனுகவும் இசையிலே ஈடுபாடுள்ளவராக இருந்தபோதும் கூட அவரது கலையுணர்வு தொழிலாளர்களின் கஷ்டங்களை உணரத்தக்க அளவு விரிவானதாக இருந்திருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொம்பனியின் நடவடிக்கைக்கு ஆதரவாக "ரைம்ஸ் ஒஃப் சிலோன்" பத்திரிகை பின்வருமாறு எழுதியது: "அச்சுத் தொழிலாளர்களின் கோரிக்கையில் அர்த்தமே யில்லை. நடைமுறையை மாற்றுவதற்கு திரு. மூர் மறுத்துள்ளது சரியே"

இந்த அச்சுத் தொழிலாளர்கள் 60 பேரின் வேலை நிறுத்தம் செப்ரெம்பர் மாதம் 12ஆம் திகதி முதல் 18ஆம் திகதிவரை நடைபெற்றது.

ஸ்தாபனரீதியான அனுபவக் குறைவாலும் போராட்டத்தினைக் கொண்டு நடத்த நிதி இல்லாமையாலும் இந்த வேலை நிறுத்தம் தோல்வி கண்டது.

கேவ் ஸ்தாபனம் "நிபந்தனையற்ற சரணுகதி" யை வலியுறுத்தியதுடன், வேலை நிறுத்தத்தில் தலைமைப் பங்கு வகித்ததாகக் கருதிய 5 தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கியதுடன் எஞ்சிய தொழிலாளர்களைத் திருப்பியும் வேலைக்குச் சேர்த்துக்கொண்டது.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அச்சுத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் தொழிலாளர்கள் மத்தியில் இருந்து பல தலைவர்களை உருவாக்கியது. இந்த வேலை நிறுத்தத்திற்குப் பிறகு, இதில் ஈடுபட்ட ஐந்து முக்கிய தலைவர்களை நிர்வாகம் வெளியேற்றியது எனினும் தங்களின் அடிப்படை உரிமைகளைக் கேட்டதற்காகத் தம் தொழில்களையே இழந்த இந்த தொழிலாளர் வர்க்கக் கதாநாயகர்களின் பெயர்களை நாம் அறிந்து கொள்ள முடியவில்லை.

இத்தலைவர்களில் ஒருவராக திரு. வில்லியத்தைப் பற்றி நமக்குச் சில தகவல்கள் கிடைத்துள்ளன. ஒரு தொழில் பயிற்சி மிக்க தொழிலாளராக இவர் கேவ் ஸ்தாபனத்தில் 10 ஆண்டுகள் வேலை பார்த்திருக்கிறார். மாதாந்தம் மூன்று ரூபாய் சம்பளத்தில் எடுபிடி வேலை செய்பவராகத் தன் தொழிலை ஆரம்பித்த வில்லியம் இதனை அடுத்து பார்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை பொதி செய்பவராகவும், இந்த வேலை நிறுத்தம் நடைபெற்ற சமயத்தில் மாதாந்தம் 17 ரூ. 50 சதம் சம்பளம் பெறும் மெஷின் ரூலராகவும் இருந்திருக்கிறார். புறக்கோட்டையில் உள்ள புதிய செட்டித் தெருவில் இவர் வாழ்ந்து வந்தார். தலைநகரில் வாழ்ந்தும், வேலை செய்தும் வரும் நகர்த் தொழிலாளர்களுடன் ஒரங்கமாக இவர் இணைந்திருந்தார்.

1883 செப்டம்பரில் சம்பளம் கொடுப்பதில் தாமதம் காட்டியபோது வில்லியம் விரைவோடு செயற்பட்டார். தனது சம்பளம் குறித்து எழுத்து மூலம் கோரிக்கை விடுத்ததோடு மனேஜரையும் நேரில் சென்று கேட்டிருக்கிறார். இந்த நடவடிக்கைகளால் நிர்வாகம் இவரை ''குழப்பம் விளைவிப்பவர்'' என்று கருதியது.

தலைமைப் பண்புகள் மிக்க வில்லியம் அச்சுத்தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தில் மிகமுக்கிய பங்கு வகித்திருக்கிறார். வேலை நிறுத்தம் முடிவுற்ற பின்னர் 1865 ஆம் ஆண்டு தொழிற் சட்டத்தின் பிரகாரம் வில்லியம் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இச்சட்டத்தின்படி ஒரு தோட்டத் தொழிலாளியோ, வேலைக்காரனே அல்லது வேறு தொழிலாளியோ அறிவித்தல் கொடுக்காது தங்கள் வேலைகளை விட்டு விலக முடியாது. இந்த அடக்குமுறைச் சட்டத்தின்படி (இச் சட்டம் 1922 இல் நீக்கப்பட்டது) வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதால் வேலையொப்பந்தத்தை மீறி நடந்தார் என்று வில்லியம் குற்றம் சாட்டப்பட்டார். இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது வில்லியம் தான் நிரபராதி என்று கருணைகாட்ட கோரவில்லை. திரு எச். ஜே. ஸி பெரேரா இவருக்காக வழக்காடினர்.

பொலிஸ் நீதிமன்றத்தில் இவர் குற்றவாளி அல்லர் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. ஆனல் ரைம்ஸ் பத்திரிகைகளும் பிற பிற்போக்குப் பத்திரிகைகளும் இந்தத் தீர்ப்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்த்தன. ரைம்ஸ் பத்திரிகை பின்வருமாறு எழுதியது: ''இந்த அசாதாரண தீர்ப்பிற்கு எதிராக உடனடியாக ஒரு அப்பீல் செய்யப்பட வேண்டும்''

அப்பீல் செய்யப்பட்டபோது உயர்நீதி மன்றத்தில் நீதியரசர் லோறி, வில்லியத்தைக் குற்றவாளியெனத் தீர்த்து ஒரு வாரச் சிறைத் தண்டனையும் அளித்தார்.

இலங்கைத் தொழிலாளர் வர்க்கத்தின் முதல் கதாநாயகனை வில்லியம் துணிவோடு வேலை நிறுத்தத்தில் பங்கு கொண்டதற்காக இரட்டிப்பாகத் தண்டிக்கப்பட்டார். பத்தாண்டு காலச் சேவையின் பின்னல் தன் தொழிலையும் இழந்ததுடன், சிறைக்கும் அனுப்பப்பட்டார்.

உணர்வு பூர்வமான தொழிற்சங்கப் போராட்டத்திற்கு மிகவும் இன்றியமையாத அம்சங்களில் ஒன்று வேலை நிறுத்தங்களின்போது அறிவுறுத்தல்கள் வழங்கத்தக்க சிறந்த தலைமை உருவாதலாகும்.

1893 இல் நடைபெற்ற அச்சுத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தின்போது, தொழிலாளர் மத்தியில் இருந்தே வில்லியம் போன்ற தலைவர்கள் உருவாகியமையைக் காண்கிறோம். வேலை நிறுத்தங்கள் சீரழிவையே உண்டுபண்ணும் என்ற கருத்து மத்தியதர வகுப்பினர் மத்தியில் நிலவுகையில் ஏ.ஈ. பூல்ட்ஜென்ஸ், டொக்டர் லிஸ்போ பின்ரோ, எச்.ஜே சி. பெரரா, சி டொன் பஸ்ரியன் போன்றோரும் பிறரும் மத்தியதர வகுப்பில் இருந்து வேலைநிறுத்தத்திற்கு ஆதரவு நல்கினர்.

இலங்கை பூர்சுவாக்களின் எழுச்சியை 19 ஆம் நூற்றுண்டில் தான் காண்கிறோம்

தென்னந்தோட்டம், காரீயம், கறுவா, சாராயக் குத்தகை போக்குவரத்து ஒப்பந்தங்கள், நகர்புறச் சொத்துக்கள் ஆகியவற்றிலிருந்து இவர்கள் தம் செல்வத்தைப் பெருக்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றிலிருந்து பெறப்பட்ட மேலதிகச் சொத்துக்கள் வெளிநாட்டுக் கல்வியில் செலவிடப்படுகின்றன. உயர்கல்வி கற்ற புதிய வகுப்பொன்று இதனுல் உருவானது.

உள்ளூர் மத்திய வகுப்பினர் செல்வம், கல்வி, அந்தஸ்து ஆகியன கொண்டிருந்த போதும் அவர்களுக்கு அரசியல் உரிமைகள் இருக்கவில்லை. அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை இருக்கவில்லை. சட்ட சபையில் அவர்களுக்கு ஜனநாயக ரீதியிலான பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை. அரசாங்க உத்தியோகங்களிலும் ஐரோப்பியர்களுக்குச் சமமாகத் தொழில் வாய்ப்பில் உரிமை வழங்கப்படவில்லை.

மேலும், கல்வியானது கிறிஸ்தவ மிஷனரிமார்களின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தமையும் பௌத்த பூர்வசுவாக்களின் வளர்ச்சிக்குத் தடையாக இருந்தது. ஏகாதிபத்திய ஆட்சியின் கீழ் பௌத்த சமயமும் கலாசாரமும் வீழ்ச்சியுற்றன.

பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான முதல் மறைமுக எதிர்ப்பு பௌத்த சமயத்தோடு தொடர்பான இரண்டு எதிர்ப்பியக்கங்களோடு வெளிப்படுத்தப்பட்டது.

- பௌத்த சமய மறுமலர்ச்சியும் பௌத்த கல்வியும்
- மதுவிலக்கு இயக்கம்

1890 களில் சமூகச் சீர்திருத்தம், மதுவிலக்கு, பௌத்த கல்வி என்பவற்ருேடு சம்பந்தப்பட்ட இயக்கங்களில் முற்போக்கு மத்தியதர வகுப்பினர் ஈடுபாடு காட்டினர்.

சமூக அநீதிகளுக்கு எதிராகக் கண்டனங்களில் ஈடுபட்ட இத் துணிச்சல் மிக்க குழுவினரே கொழும்பில் நடைபெற்ற முதல் தொழிலாளர் போராட்டத்திற்கு ஆதரவாக இருந்தனர்.

தொழிற்சங்கக் கருத்துக்களை முதலில் அறிமுகப்படுத்தியவரும் இலங்கையின் முதற் தொழிற்சங்கத்தின் செயலாளருமான திரு அல்பிரட் எட்வர்டு பூல்ட்ஜென்ஸ் (1865—1916) மாத்தறையைச் சேர்ந்த டச்சுப் பறங்கியராவர். புலமைப்பரிசில் பெற்று இவர் கேம்பிரிட்ஜ்ஜில் 1887 இல் பட்டதாரியானுர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கிலாந்தில் இருந்தபோதே பூல்ட்ஜென்ஸ் இரண்டு முக்கிய இயக்கங்களால் பாதிக்கப்பட்டார்.

டார்வின் காலத்தில் பைபிள் தத்துவத்திற்கு எதிராகவும் தேவாலயம், மிஷனரிமார்களுக்கு எதிராகவும் எழுந்த சுய சிந்தனையாளர்களின் கிறிஸ்தவ எதிர்ப்பியக்கம் முக்கியமானது.

அக்காலத்தில் இங்கிலாந்தில் துரிதமாக வளர்ச்சியுற்று வந்த தொழிற்சங்க இயக்கம் அடுத்து முக்கியமானது.

ஒருபுறம் அமிதமான செல்வம் நிரம்பி வழியும் நிலையில் இன்னொருபுறம் லண்டனின் கிழக்கு முனையில் வீழ்ச்சியும் வறுமையும் விரக்தியும் தாண்டவமாடுவதைப் பற்றி பூல்ட்ஜென்ஸ் எழுதினார். நாசம் தரும் குடியைப்பற்றியும் வீடில்லாமலும் பட்டினியாலும் வாடும் பல்லாயிரக்கணக்கானோரின் நிலைமைகளையும் எடுத்துக் காட்டினார். லண்டனில் நடைபெற்ற சோஷலிஸவாதிகளின் பொது ஊர்வலத்திலும் பங்கு கொண்டார்:

கிறிஸ்தவ தேவாலயத்தை விமர்சித்தபோது அவர் பின்வருமாறு குறிப்பிட்டார்.

“ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் உதவுவார் யாருமில்லாமல் பனிமூடிய வெறுந்தரையைத்தான் படுக்கையாக்கிக் கொண்டிருக்கிறார்கள். கிறிஸ்தவ இங்கிலாந்தில் இத்தகைய நிலைமை ஏற்படலாமா? ‘உன்னிடமுள்ள சகலதையும் விற்று ஏழைகளுக்கு வழங்குவாயாக’ என்று பைபிள் கூறுகிறது. ஆனால் சக கிறிஸ்தவர்கள் வறுமையிலும் விரக்தியிலும் வாழும்போது கிறிஸ்தவக் குருமார்கள் வாழ்க்கையின் சுகபோகங்களை அனுபவித்து வருகிறார்கள். பட்டினியால் வாடுவோருக்கு உணவளிக்கப் பணம் இல்லாமல் இருக்கும்போது வெஸ்மினிஸ்ரர் அபேக்குச் செலவழிப்பதைப்போல பெருந்தொகைப் பணம் கிறிஸ்தவ தேவாலயங்களுக்குச் செலவிடப்படுகிறது”.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● *1889* இலிருந்து *1900* வரை பூல்ட்ஜென்ஸ் ஆனந்தாக் கல்லூரியின் அதிபராக இருந்தார். (அப்போது இக்கல்லூரி புறக்கோட்டை பௌத்த மாணவர் பாடசாலையாக இருந்தது.)

● *1890* இலிருந்து *1903* வரை பி. டி. எஸ். நடாத்திய பௌத்த பாடசாலைகளின் பொது முகாமையாளராக இருந்தார்.

● ''பௌத்தன்'' என்ற சஞ்சிகையின் ஆசிரியராக இருந்தார்.

● மிஷனரிமாரின் கல்வி முறைக்கு எதிராக உறுதியான இயக்கம் நடத்தினர்.

● பௌத்தர்களை நசுக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கல்விக்கொள்கையைத் தாக்கினர்.

● கொலனித்துவ ஆட்சியைக் கடுமையாக விமர்சித்தார்.

1899 இல் அவர் பின்வருமாறு எழுதினர் :– நடைமுறையில் கிறிஸ்தவம் ஒரு கேலிக் கூத்தாகவே எனக்குத் தென்படுகிறது. மிஷனரிமார்களதும் பைபிள்களதும் ஏற்றுமதிக் கப்பால் பெருந்தொகையாக மதுப்புட்டிகளும் தோட்டாக்களும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஒன்று ஆத்மாவைக் கொல்வதற்கும், மற்றது உடலைக் கொல்வதற்குமாகும்''.

தொழிற் சங்க இயக்கத்தைப் பற்றிய தீர்க்கதரிசனம் கொண்டிருந்த முதல் இலங்கையர் பூல்ட்ஜென்ஸ் ஆவார். இவர் வெளிப்படையாகவே தொழிற்சங்கங்களை ஆதரித்தார். 1893 ஆம் ஆண்டில், அச்சுத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் ஆரம்பிப்பதற்கு சில வாரங்களுக்கு முன்னதாக கொழும்பில் உள்ள தொழிலாளர்கள், தொழிற்சங்கமயமாக்கப்படும் முதிர்ச்சிக் கட்டத்தில் இருப்பதாகவும் அச்சுத் தொழிலாளர்களே இதற்குத் தலைமை கொடுக்க வேண்டும் என்றும் அவர் ஒரு கட்டுரையில் தெரிவித்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அச்சுத் தொழிலாளர்கள் நியாயமான அளவில் வலிமை படைத்தவர்களாவர். சக தொழிலாளர்களைக் காட்டிலும் விசாலமான ஞானம் கொண்டவர்களுமாவர். எனவே நாங்கள் வலியுறுத்தும் தொழிற் சங்க அமைப்பில் தொழிற் சங்க இயக்கத்தின் தலைமைப் பாத்திரத்தை ஏற்கும் கடமை அவர்களுக்குண்டு. லண்டன் அச்சுத் தொழிலாளர் சங்கம் அமைக்கப்பட்டுள்ள தத்துவத்தின் அடிப்படையில் இங்கும் ஒரு சங்கம் அமைக்கப்பட வேண்டும். அச்சுத் தொழிலாளர்களில் பிரசித்தம் வாய்ந்த எவராயினும் ஏதாவது பொது நடவடிக்கை எடுப்பதற்கு முன்னல் எங்களுடன் தொடர்பு கொண்டால் நாம் மிகவும் மகிழ்ச்சியடைவோம். நாம் அவர்களுக்குத் திட்டவட்டமான நடவடிக்கைகளை மேற் கொள்வது பற்றிய திட்டத்தை வழங்குவோம்" என்று அவர் எழுதினர்.

இலங்கை அச்சுத்தொழிலாளர் சங்கத்தின் தலைவராக டொக்டர் பி.எம். லிஸ்போ பின்ரோ 1857—1898இல் விளங்கினர். இந்தியாவில் கோவாவைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் ஒரு டொக்டராவார். புறக்கோட்டையில் டாம் வீதியில் வாழ்ந்தார். பல கண்டன இயக்கங்களில் இவர் தீவிரமாக ஈடுபட்டார்.

● டாக்டர் பின்ரோ இலங்கையில் உள்ள கத்தோலிக்க தேவாலயத்துடன் கடுமையான போராட்டம் நடத்தினர். "சுயேச்சையான கத்தோலிக்கர்கள்" என்ற தனிக் குழுவை அமைத்தார்.

● மதுவிலக்குப் பிரசார இயக்கத்தில் தீவிரமாக இருந்தார். மதுவின் தீமைகளை விளக்கிப் பல துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டார்.

● டொக்டராக இருந்தும் நகர்ப்புறத்தில் உள்ள ஏழைகளின் மத்தியிலேயே வாழ்ந்தார். அவர்களுடைய வாழ்க்கை நிலைமை, தொழில் நிலைமை என்பவற்றைப் பற்றி அவருக்கு நல்லறிவு இருந்தது. அவர்களின் பிரச்சனைகளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி அடிக்கடி எழுதினர். 1893 இல் அவர் பின்வருமாறு எழுதினர்: "கொழும்பு அச்சுத் தொழிலாளர்களில் டசின் கணக்கானோர் 15 அடி நீளமும் 8 அடி அகலமும் கொண்ட மோசமான வீடுகளிலேயே வாழ்கின்றனர். சில வீடுகளுக்கு ஒரு கதவு வைக்கக் கூட முடியாது. சில வீடுகளில் யன்னல் கள் இல்லை. குசினியிலிருந்து வரும் புகை வீடு முழுவதும் பரவுகிறது''.

● ''சுயேச்சையான கத்தோலிக்கர்'' என்ற பத்திரிகையை நடத்தினர். இந்தப் பத்திரிகையிலேயே தொழிற்சங்க இயக்கத்தை ஆதரித்து பூல்ட்ஜென்ஸ் எழுதிய கட்டுரை கள் பிரசுரமாகின.

அச்சுத் தொழிலாளர்களுக்கான இன்னுமொரு ஆதர வாளர் திரு. எச். ஜே. சார்ள்ஸ் பெரேரா (1808 — 1924) ஆவார். வழக்கறிஞரான இவர் பிற்காலத்தில் அரசியல் சீர்திருத்த இயக்கங்களில் தீவிரமாக ஈடுபட்டார்.

● தொழில் ஒப்பந்தத்தை மீறியதற்காகக் குற்றஞ்சாட்டப் பட்ட வில்லியத்திற்காக (கேவ்ஸில் பணியாற்றிய போது) இவர் நீதிமன்றத்தில் வழக்காடினர்.

● வேலை நிறுத்தம் தொடர்பாகவும், நீதிமன்றத்தின் தீர்ப்பை யொட்டியும் "சிலோன் இண்டிபெண்டன்ற்'' என்ற பத்திரிகை, "ஒன்றுமறியாத தொழிலாளர்களைத் தவறானவழி யில் கொண்டு செல்ல முற்படும் குழப்பம் விளைவிக்கும் தீவிரவாதிகளைத் தண்டிக்கும் சட்டம் கொண்டு வரப்பட வேண்டும்'' என்று எழுதியபோது திரு. பெரேரா, ''ஊழல் மலிந்த, நாசம் விளைவிக்கும் இலங்கைப் பத்திரிகைகளை''க் கண்டித்தார்.

● 1865இல் தொழிற் கட்டளை விதிக்கு எதிராகத் தொழி லாளர்களைக் கிளர்ந்து எழுமாறு கோரும் கட்டுரையையும், எழுதினர். இது சம்பந்தமாக அவர் பின்வருமாறு எழுதி னர்:- ''ஈவிரக்கமற்ற முதலாளிகளிடமிருந்து இலங்கைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர்கள் விடுதலையைப் பெற்றுக் கொள்ள பசியும் விரக்தியும் உதவாது என்பதை நாம் நம்புவோம். இந்தக் கொடூரமான, அநீதியான சட்டத்திற்கு எதிராக இலங்கை யிலுள்ள சகல தொழிலாளர்களும் கிளர்ந்து எழுச்சியுற வேண்டும் என எதிர்பார்க்கிறேன்''.

● *1908, 1912, 1922* ஆகிய வருடங்களில் நடைபெற்ற அரசியல் சீர்திருத்த இயக்கங்களில் அவர் தீவிரமாக ஈடு பட்டார். இலங்கைத் தேசிய காங்கிரஸின் தலைவராகவும் அவர் தெரிவு செய்யப்பட்டார்.

□ □ □

அச்சுத் தொழிலாளர்களின் போராட்டத்தோடு தொடர்பு கொண்ட மற்றுமொருவர் மார்ட்டினர்ஸ் சி. பெரேரா (*1855 — 1934*) ஆவார். சிறந்த சமூக சீர்திருத் தவாதியான இவர் மதுவிலக்குப் பிரசாரகரும் ஆவார்.

● பௌத்த கல்வி இயக்கத்தில் பெரேரா தீவிரமாக ஈடு பட்டார். சில வருஷங்கள் ஆனந்தாக் கல்லூரியிலும் ஆசிரி யராகப் பணியாற்றினர்.

● இலங்கையின் பிரசித்தி பெற்ற மதுவிலக்குப் பிரச்சா ரகர்களில் ஒருவராக விளங்கினர். பொதுமக்கள் மத்தியில் இவர் பாடிய மதுவிலக்குப்பாடல்கள் பிரசித்தம் வாய்ந்தவை.

● *1979*இல் சேர்.பொன்னம்பலம் அருணசலம் தோற்று வித்த இலங்கைத் தொழிலாளர் சம்மேளனத்தில் தீவிரமான உறுப்பினராகச் செயற்பட்டார். *1919* இல் இலங்கைத் தேசிய கொங்கிரஸிலும் அங்கம் வகித்தார்.

● முதன் முதல் பைசிக்கிளில் ஓடிய இலங்கையர் இவரா வார். பைசிக்கிள் பாவனையை இலங்கைக்கு அறிமுகப்படுத் தியவரும் இவரே. பைசிக்கிள்களை இறக்குமதி செய்து, அவற் றைப் பழுது பார்ப்பதோடு, மெக்கானிக்கல் வேலைகளையும் பொறுப்பேற்று வியாபார நடவடிக்கையை ஆரம்பித்தவரும் இவரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் நடை பெற்றுக்கொண்டிருக்கும்போது, நூற்றுக்கணக்கான கொழும் புத் தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து ''இலங்கை அச்சுத் தொழிலாளர் சங்கத்தை'' அமைத்தனர்.

பத்திரிகைச் செய்திகளில் இருந்து, இந்த சரித்திரப் பிரசித்திபெற்ற கூட்டத்தைக் கண்காணிக்க அரசாங்கம் ஜோன் கொத்தலாவலை உட்பட ஐந்து பொலிஸ் இன்ஸ் பெக்டர்களையும் 20பொலிஸ் கொன்ஸ்டபிள்களையும் அனுப்பி வைத்ததாக அறிகிறோம்.

இக்கூட்டத்தில் ''ஒற்றுமையே பலம்'' போன்ற வார்த் தைகளைக் கொண்ட சுலோக அட்டைகளும் கொண்டு செல் லப்பட்டதாகப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. இந்தச் சுலோக அட்டைகள் அரசாங்க அலுவலகங்களில் பாவிக் கப்படும் உயர்தர மில்போர்ட்டுகளில் செய்யப்பட்டிருந்தன. பென்சிலில் அழகான எழுத்துகளில் இவை எழுதப்பட்டி ருந்தன.

இக்கூட்டத்திற்கு திரு எச். ஜே. சார்ள்ஸ் பெரேரா தலைமை வகித்தார். சங்கத்தின் நோக்கம் முதலாளிகளுக் கும் தொழிலாளர்களுக்கும் மோதலை உண்டுபண்ணுவதல்ல என்று இக்கூட்டத்தில் தெரிவித்த இவர், தொழிலாளர்க ளுக்குச் சில நன்மைகளைப் பெற்றுக் கொடுப்பதே அதன் நோக்கம் என்றும் தங்களின் கீழ் வேலை செய்யும் தொழி லாளர்களை அடக்குவதோடு கொடூரமாகவும் அநீதியாகவும் நடக்கும் முதலாளிகளே தொழிற்சங்கம் என்ற பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே நடுங்குகிறார்கள் என்று தெரிவித் தார்.

இச்சங்கத்தின் செயலாளரான ஏ. ஈ. பூல்ட்ஜென்ஸ் அச் சுத் தொழிலாளர்கள் பெறும் குறைந்த சம்பளத்தைப் பற் றிப் பேசினார். தொழிலாளர்களின் கோரிக்கைக்கு முதலாளி மார் எதிர்ப்புத் தெரிவித்தால் அச்சுத் தொழிலாளர்கள் தாமே ஒன்று சேர்த்து கூட்டுறவு அச்சியந்திரசாலைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவவேண்டும் என்ருர். இங்கு அச்சுத் தொழிலாளர்களே அச்சு நிறுவனங்களின் உரிமையாளராக இருப்பதோடு அடிமைகள் போல எவரும் இருக்கமாட்டார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

தன்னைக் கிளர்ச்சியாளனுகவும் புரட்சிக்காரனுகவும் கூட்டத்தில் அறிமுகப்படுத்திக் கொண்ட டொக்டர் பி. எம். லிஸ்பே.r பின்ரோ வேலைக்குப்போகாத நாட்களுக்காகத் தொழிலாளர்களுக்கு முதலாளிமார் அபராதம் விதிப்பதைக் குறிப்பிட்டுப் பேசினுர்.

திரு. மார்ட்டினஸ் பெரேரா, திரு. சி. டொன் பஸ்டியன் போன்ருேரும் பேசினர். முன்னைய அச்சுத் தொழிலாளியும் பௌத்த மது விலக்குப் பிரசாரகருமான டொன் பஸ்டியன் பேசுகையில் தன் எசமானருக்கு மரியாதை வழங்குவதை பாரம்பரிய சிங்களக் கண்ணுேட்டம் வலியுறுத்திலுைம் தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்ருர்.

இக்கூட்டத்திற்குப் பிறகு, நூற்றுக்கணக்கான அச்சுத் தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து, இலங்கை முழுவதிலும் உள்ள மற்ற அச்சுத் தொழிலாளர்களுடனும் சேர்ந்து சங்கங்கள் அமைக்கப்படும் நம்பிக்கையை வெளிப்படுத்தவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அச்சுத் தொழிலோடு சம்பந்தப்பட்ட தொழிலாளர்களின் தொழில் நலனையும் பொதுவான வாழ்க்கை நலனையும் பேணுவதே புதிய சங்கத்தின் நோக்கங்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

பொதுவான வாழ்க்கை நலனை சங்கம் வலியுறுத்தியது. உறுப்பினர்கள் தம் சம்பாத்தியத்தின் 2 வீதத்தினைச் சங்கத்திற்கு வழங்கினர். சுகவீனமான காலத்திலும் சாவு நேரும் போதும் அவர்களுக்கு சங்கம் அலவன்ஸுகள் வழங்கியது. சங்க விதிகளைப் பற்றிய கைநூல் ஒன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது. ''த சிலோன் பிரிண்டர்'' என்ற பத்திரிகையும் வெளியிடப்பட்டது. இப்பத்திரிகையின் முதலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வது வெளியீட்டில் இலங்கைத் தொழிலாளர் வகுப்புகள் பற்றிய பூல்ட்ஜென்ஸின் கட்டுரையும், இலங்கைத் தொழிலாளர்களின் சங்கங்கள் பற்றிய பிண்ரோவின் கட்டுரையும் இடம் பெற்றன.

அச்சுத் தொழிலாளர்களின் கிளர்ச்சி தோல்வியிலேயே முடிந்தது. தொழிற் சங்கம் பல சலுகைகளை வழங்கிய போதும் சங்கத்தின் மீதிருந்த அக்கறை குறைந்துவிட்டது என்று 1894 இல் டொக்டர் லிஸ்போ பிண்ரோ முறையீடு செய்தார்.

கொலனித்துவ அதிகாரிகள், முதலாளிமார் ஆகியோரின் நிலைப்பாடு, மத்தியதர வகுப்பின் கருத்துகளை வெளிப்படுத்தும் பத்திரிகைகளின் கண்ணோட்டம் என்பன தெளிவாக விளங்கின.

"தொழிற்சங்க அபாயம்" வலியுறுத்தப் பட்டதுடன் அதனை அழிப்பதற்கு எல்லா நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்பட்டன.

உதாரணமாக, 1983 ஜூலை மாதத்தில் தொழிற்சங்கங்களைப்பற்றி பூல்ட்ஜென்ஸ் கட்டுரை எழுதியபோது "சிலோன் இன்டிபென்டன்ற்" அவரைப் பின்வருமாறு குற்றம் சாட்டியது: "தங்கள் முதலாளிமாருடன் அதுகாலவரையும் சுமுகமாக ஒத்துப் பணிபுரிந்த தொழிலாளர்கள் மத்தியில் இவர் கிளர்ச்சியைத் தூண்டி விடுகிறார்".

மேற்கத்தைய பாணியில் அமைந்த கிளர்ச்சி நடவடிக்கைகளுக்கு எதிராக "சிலோன் ஒப்சேர்வர்." எச்சரிக்கை விடுத்தது.

தங்கள் தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்கு எதிராக கேவ்ஸ் நிறுவனம் உறுதியாக நின்றமைக்காக "ரைம்ஸ்," பத்திரிகை பாராட்டுத் தெரிவித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்களை பிற அச்சக முதலாளிகள் வேலையில் அமர்த்திக் கொள்ளக்கூடாது என்று "சிலோன் ஒப்சேர்வர்" ஆலோசனை கூறியது.

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு, தொழில் ஒப்பந்தத்தை மீறியமைக்காக வில்லியத்திற்கு விதிக்கப்பட்ட சிறைத்தண்டனையை உயர் நீதிமன்றம் இறுதியாக ரத்துச் செய்தது.

ஆனால், முதலாளிமார்களுக்கு எதிராக ஆரம்பப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த நகர்ப்புறத் தொழிலாளர் வர்க்கத்திற்குப் புதிய பாதைகளைக் காட்ட ஒரு கோஷ்டியினர் முன் நின்று செயற்பட்டனர்.

இவர்கள் சமுக சீர்திருத்தவாதிகளும், மது விலக்குப் பிரசாரகர்களும், பௌத்த தீவிர வாதிகளுமாவர். கொலனித்துவ அதிகார முறைக்கு எதிராயும் மிஷனரி கல்வி முறைக்கு எதிராயும் இவர்கள் பல்வேறு முனைகளில் எதிர்ப்பியக்கங்களில் ஈடுபட்டனர். 1890 களில் இவர்களிடம் திட்டவட்டமான தேசியக் கொள்கையோ, வரையறுக்கப்பட்ட அரசியல் யுக்தியோ இருக்கவில்லை. எனினும் பிற்பட்ட காலங்களில் இவர்களில் சிலர் தேசிய இயக்கத்தை ஆதரித்தனர்.

□ □ □

எண்பது ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற வேலை நிறுத்தத்தை ஆராயும்போது தொழிலாளர்கள் மத்தியில் வர்க்க உணர்வு இல்லாமையும் மத்திய வகுப்புத் தலைவர்கள் மத்தியில் அரசியல் உணர்வு இல்லாமையும் தொழிலாளர் இயக்கத்தை வளர்த்தெடுத்துச் செல்வதற்குத் தடைகளாக அமைந்தன என்பது தெளிவாகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டு இலங்கையின் பின்னணியில் வர்க்க உணர்வு, அரசியல் உணர்வு என்பன எதைக் குறிக்கின்றன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்க்க உணர்வு என்பது—

- தொழிலாளர் வர்க்கம் சுரண்டும் வர்க்கத்திற்கு உரியதாக இருக்கிறது என்பதை உணர்தலாகும்.

- தொழிலாளர் வர்க்கம் ஒரு ஸ்தாபனமாக அமைய வேண்டிய அவசியத்தை உணர்ந்தமை:

- தொழிலாளர் வர்க்கத்தின் பொருளாதார, அரசியல் கோரிக்கைகளை வென்றெடுப்பதற்குப் போராட்டம் நடத்த வேண்டிய அவசியத்தை உணர்ந்தமை.

அரசியல் உணர்வு என்பது—

- கொலனித்துவ ஆட்சியின் பாதகமான பொருளாதார அரசியல், சமூக, கலாசார அம்சங்களை உணர்ந்தமை.

- ஓர் அரசியல் திட்டத்தின் அவசியத்தை உணர்ந்தமை.

- கொலனித்துவ ஆட்சியாளர்களுக்கு எதிராக கூட்டு நடவடிக்கை மேற்கொள்ளும் அவசியத்தை உணர்ந்தமை.

1893 ஆம் ஆண்டில் தேசியப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான நிலைமைகளோ, வலிமைமிக்க உறுதியான தொழிற்சங்க இயக்கம் உருவாவதற்கான நிலைமைகளோ வளர்ச்சியுற்றுக் காணப்படவில்லை.

எதுவாயினும், இலங்கையின் தொழிலாளர் வர்க்கத்தின் சரித்திரத்தில் 1893 ஆம் ஆண்டு நடைபெற்ற அச்சுத் தொழிலாளர் வேலை நிறுத்தம் பெரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். கொழும்புத் தொழிலாளர் மத்தியில் வர்க்க உணர்வும், மத்திய வகுப்பினரின் மத்தியில் அரசியல் உணர்வும் கருவுற ஆரம்பிப்பதை இது உணர்த்துகிறது. பிற்பட்ட காலங்களில் நடைபெற்ற பெரும் தொழிலாளர் வர்க்கப் போராட்டங்களுக்குப் பச்சை விளக்குக் காட்டிய ''வர்க்க உணர்வின் பிரதிபலிப்பே'' இந்த வேலை நிறுத்தமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவ வெளியீடு
(தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய
மூன்று மொழிகளிலும்)

குமாரி ஜயவர்த்தனவின்

வெளிவர இருக்கும் ஏனைய நூல்கள்:

- இலங்கையில் இடதுசாரி இயக்கத்தின் தோற்றம் (இரண்டாம் பதிப்பு).
- கொழும்பு தொழிலாள வர்க்கத்தின் முன்னோடிகள்.
- 1906 ஆம் ஆண்டின் வண்டில் தொழிலாளர் வேலை நிறுத்தம்.
- ஏ. ஈ. குணசிங்காவும் 1920களின் தொழிலாளர் போராட்டங்களும்.
- இலங்கையும் ஒக்ரோபர் புரட்சியும்.
- தொழிற்சங்கங்களும் அரசியலும் 1935 - 1947.

யாழ்ப்பாணத்தில் தொடர்புகளுக்கு:

62, வளாக ஒழுங்கை, திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் முதலாவது

**வேலைநிறுத்தம்;**

அச்சுத்தொழிலாளர் போராட்டம் - 1893

---

மூலம்: குமாரி ஜெயவர்த்தன
தமிழில்: மு. நித்தியானந்தன்

---

சஞ்சீவ வெளியீடு:

69, கிறெகறீஸ் வீதி
கொழும்பு.7, இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org